# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439,  4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


## தேசிய மாவீரர் ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டி – 2017

**"எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை, இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்க வேண்டும்."**
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்-

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும், தொன்மையான மொழியையும், தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்துத் தமிழினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு எம்மினம் தள்ளப்பட்டது. அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ச்சிறார்களும் இளையவர்களும் தாய்மொழியினதும் தாயகத்தினதும் மாவீரர்களினதும் சிறப்புகளை அறிந்து கொள்வதற்கும் அவர்களின் பேச்சாற்றலை வளர்த்தெடுக்கவும் தேசிய மாவீரர் ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டி நடாத்தப்படுகின்றது.

பேச்சுப்போட்டிக்கு வயதுப்பிரிவின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் விண்ணப்பிக்கலாம். மாநில மட்டத்தில் நடாத்தப்படும் பேச்சுப்போட்டிகள் (5 – 11 வயதுப்பிரிவு) விண்ணப்பிக்கும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப பேர்ண், சூரிச், லௌசான், லுட்சேர்ன் ஆகிய நான்கு வலயங்களில் நடாத்தப்படும். 13 வயது தொடக்கம் 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குமான பேச்சுப்போட்டிகள் நாடுதழுவிய ரீதியில் நடாத்தப்படும். வலயமட்டத்தில் நடைபெறும் போட்டிக்கு **வயதுப்பிரிவின் அடிப்படையில் குறைந்தளவான மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து அப்பிரிவிற்கான போட்டி வேறொரு வலயத்துடன் இணைத்தே நடாத்தப்படும்**.

**தரப்பட்ட பேச்சுகளில் மாற்றம் செய்தல் அல்லது வேறு பேச்சுகளைப் பேசுதல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினர் தாமாக அல்லது தங்களுக்கு அறிமுகமானவர்களுடன் இணைந்து பேச்சினைத் தயாரிக்க வேண்டும். **(நேரம்: 8-10 நிமிடங்கள்)**

வலயமட்டப் போட்டிகள் **18.11.2017 சனிக்கிழமை** நடைபெறும். 13, 15, 17, 19, 21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினருக்கான போட்டி **19.11.2017 ஞாயிற்றுக்கிழமை சூரிச்** நகரில் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்படுவதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் **27.11.2017 திங்கட்கிழமை** பிறிபேர்க் நகரில் நடைபெறும் தேசிய மாவீரர்நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

பேச்சுப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்குரிய பேச்சினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் **www.maaveerarnal.ch** என்ற இணையத்தளத்திலும் **தமிழர் நினைவேந்தல் அகவம்** எனும் முகநூலிலும் தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 04.11.2017 சனிக்கிழமை**

போட்டிக் கட்டணம்: 15 CHF ,  பிந்திய விண்ணப்பக் கட்டணம்: 25 CHF

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக் கட்டணத்தினையும் வகுப்பாசிரியர் / தமிழ்ப்பள்ளி முதல்வரிடம் வழங்குதல் வேண்டும். கல்விச்சேவையால் நடாத்தப்பெற்ற பொதுத்தேர்வுக்கு இதுவரை தோற்றாத மாணவர்களும் ஏனையவர்களும் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் போட்டிக்கட்டணம் செலுத்திய பிரதியினையும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி:**

Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439
4528 Zuchwil.

**தபாற்கணக்கு இலக்கம்:** 60 - 34553 - 3

**தொடர்புகளுக்கு:** 076 528 71 12,  076 426 27 80,  077 911 89 58

**ம.ப.பா**

# தேசிய மாவீரர் ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டி - 2017

## வயதுப்பிரிவும் பேச்சுகளின் தலைப்புகளும்

1. **5 வயதுப் பிரிவு – அன்பால் உயர்வோம்**
   (01.01.2012 - 31.12.2012 வரையில் பிறந்தோர்)

2. **6 வயதுப் பிரிவு – தமிழ் எங்கள் உயிர்**
   (01.01.2011 - 31.12.2011 வரையில் பிறந்தோர்)

3. **7 வயதுப் பிரிவு – அறம் காப்போம்**
   (01.01.2010 - 31.12.2010 வரையில் பிறந்தோர்)

4. **8 வயதுப் பிரிவு – நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**
   (01.01.2009 - 31.12.2009 வரையில் பிறந்தோர்)

5. **9 வயதுப் பிரிவு – நாம் அறிந்த நாட்டுப்பற்றாளர்**
   (01.01.2008 - 31.12.2008 வரையில் பிறந்தோர்)

6. **10 வயதுப் பிரிவு – எமக்கு வேண்டும் எம் தாயகம்**
   (01.01.2007 - 31.12.2007 வரையில் பிறந்தோர்)

7. **11 வயதுப் பிரிவு – தியாகதீபம் திலீபன் மாமா**
   (01.01.2006 - 31.12.2006 வரையில் பிறந்தோர்)

8. **13 வயதுப் பிரிவு – வீழாது எம் வீரம்**
   (01.01.2004 - 31.12.2005 வரையில் பிறந்தோர்)

9. **15 வயதுப் பிரிவு – எம் வாழ்வுக்காய் தம்மைத் தந்தோர்**
   (01.01.2002 - 31.12.2003 வரையில் பிறந்தோர்)

10. **17 வயதுப் பிரிவு – தமிழ் மொழியின் தொன்மை**
    (01.01.2000 - 31.12.2001 வரையில் பிறந்தோர்)

11. **19 வயதுப் பிரிவு – தமிழர் வரலாற்றில் அறப்போர்**
    (01.01.1998 - 31.12.1999 வரையில் பிறந்தோர்)

12. **21 வயதுப் பிரிவு – வலிகளிலிருந்து வலிமை பெறுவோம்**
    (01.01.1996 - 31.12.1997 வரையில் பிறந்தோர்)

13. **22 வயதும் அதற்கு மேலும் - நெஞ்சினில் நெருப்பேந்தி நிற்கின்றோம்**
    (31.12.1995ம் திகதியும் அதற்கு முன்பும் பிறந்தவர்கள்)